**அந்நிய ஒதுக்கு நிதிகள்:** இலங்கையினது சென்மதி நிலுவையில் ஆண்டாண்டு குறைவு ஏற்பட்டதன் பயனாக இலங்கையின் அந்நிய ஒதுக்குநிதியில் ஓர் கணிச மான வீழ்ச்சி ஏற்பட்டது. 1959ம் ஆண்டு மார்கழி மாதம் முடிவுற்ற மூன்று ஆண்டுகளில் இலங்கையின் வெளிநாட்டு சொத்துக்கள் 1957ம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்த 11790 இலட்சம் ரூபாய்கள் மட்டத்திலிருந்து, 4900 இலட்சம் ரூபாய்களால் குறைந்து, 1959ம் ஆண்டு முடிவில் 6890 இலட்சம் ரூபாய்களாக நின்றது. 1959ம் ஆண்டில் மட்டும் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 1950 இலட்சம் ரூபாய்க ளால் குறைந்தது. 1958ம் ஆண்டு, சென்மதி நிலுவைக் குறைவின் முழுத்தாக்குதலை இலங்கையின் வெளிநாட்டுச் சொத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி பிரதி பலிக்கவில்லை. ஏனெ னில் இத்தாக்குதல், பெரும்பாலும் இருபக்க உடன்படிக்கைகளின் கீழ் ஏற்பட்ட இயக் கங்களிலிருந்து ஒன்று சேர்ந்த இலங்கையின் பொறுப்புகள் அதிகரித்தமையால் ஆற் றப்பட்டது. இதற்கு மாறாக 1959ம் ஆண்டு, வெளி நாட்டு ஒதுக்கு நிதியிலிருந்து எடுக்கப்பட்ட பணத்திலிருந்தே, பெரிய அளவு சென்மதி நிலுவைக்குறை பெரும்பா லும் நிவர்த்திக்கப்பட்டது

ஏற்றுமதியினால் கிடைக்கும் வருமானங்கள்] அதிகரித்தும், வர்த்தகமாற்று விகிதம் அனுகூலம் தரக்கூடிய சீர்திருத்தம் அடைந்திருந்தும், இக்காலத்தில் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துகளின் இழப்பு நிகழ்ந்திருக்கின்றதென்பது கவனத்துக்குரியது. இந்தப் போக்குத் தொடருமாயின் வேறு முக்கிய ஆதாரம் இல்லாத பட்சத்தில், சென் மதி நிலுவைக்குறைவின் முக்கிய பகுதி, தற்பொழுதே கீழ்மட்டத்துக்கு வந்துள்ள வெளிநாட்டு ஒதுக்கு நிதியிலிருந்தே, நிவர்த்திக்கப்படல் வேண்டும். மேலும் ஒருநிலை யான வரவு செலவுத் திட்டக்குறைவும், பத்து ஆண்டுத் திட்டத்தின் தீவிரமான தொ ழிற்பாடும், வெளிநாட்டுச் சொத்தின் பேரில் உள்ள அமுக்கத்தை மேலும் அதிகரிக்கும். இது வெளிநாட்டுச் சொத்தின் நிலைமையை மேலும் தளர்த்திவிடும். அந்நியச் செலா வணியின் தற்போதய கேள்வி விகிதத்தை ஈடு செய்யும் அளவுக்கு இப்போது உள்ள வெளிநாட்டுச் சொத்து மட்டம் இல்லை. மேலும் நிதானமாக அதிகரித்துக் கொண்டு வரும் செலவு விகிதத்தை எதிர் காலத்திலும் ஈடு செய்யும் அளவுக்குக்கூட இம்மட் டம் இல்லை. எனவே எங்கள் வெளி நாட்டுச் சொத்தில் பாரதூரமான வீழ்ச்சி ஏற் படுவதைத் தடுப்பதற்கு மேலும் நடவடிக்கைகள் எடுப்பது மிகவும் அவசியமாகின்றது. வெளிநாட்டுச் சொத்தின் எதிர்கால உபயோகம் பற்றி எச்சரிக்கையாக இருத்தல் மிக வும் அத்தியாவசியமாகும்.

## III. கொள்கைகளும் நடவடிக்கைகளும்.

1958ம் ஆண்டு அறிக்கையில் பொருளாதார வளர்ச்சி பெறாத இலங்கைபோன்ற நாடுகளில் நிலவும் விசேடமான தன்மைகள், எப்படி மகா வங்கியின் செயலாற்றத் திற்கு ஓர் இயல்பான எல்லையை வரையறுக்கும், என்பது கவனத்திற்கு கொண்டுவரப் பட்டது. கடந்த ஆண்டு அறிக்கையில் அழுத்தமாகச் சொல்லப்பட்டப்படி, இலங்கையில் மகா வங்கியின் செயலாற்றத்தைத் தடை செய்யும் இரு முக்கியமான தன்மைகளா வன: பணச் சந்தையின் விருத்தியடையாத்தன்மையும், பொருளாதார இயக்கத்தை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகள் மகா வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ளன என்ற உண்மையுமே ஆகும். அத்தகைய காரணிகளில் ஒன்றான அரசாங்க அரசிறைக் கொள்கை 1959ம் ஆண்டுக்கு முன் ஒரு போதும் இல்லாத அளவுக்கு விசுவரூபம் எடுத்தது. அரசாங்கம் பாரமேற்றுக் கொண்ட அரசிறைக் கொள்கையாலும் ஏனைய கொள்கைகளாலும் பணம் சம்பந்தப்பட்ட செயலாற்றத்தைப் பயன்படத்தக்க முறையில் நடத்த மகா வங்கியின் ஆற்றல் பாரதூரமான வகையில் வரையறுக்கப்பட்டது. ஏனைய பகுதிகளில் அரசாங்க ஆதரவு இன்றி, நாணய சம்பந்தமான காரணங்கள் மூலமாக மட் டும் நினைத்த குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ள முடியுமா என்பது பற்றிப் பல நாடுகளில் கொள்கை சம்பந்தமான சர்ச்சைகள், தர்க்கங்கள், இருந்து வருகின்றன.

1959ம் ஆண்டு இலங்கை சம்பந்தப்பட்ட வகையில், அரசியற் குழப்பங்கள் காரணமாக நாணயக் கொள்கைகளுக்குப் பயன் படத்தக்க முறையில் அரசாங்கம் ஆதரவு அளிக்க இயலாது போயிற்று.

அரசாங்கத்தின் ஆபத்தான நிதி நிலைமை, வெளிநாட்டுச் சொத்தின் விரைவான வீழ்ச்சி, முதலிய இரு வெவ்வேறு, ஆனால், ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்ட, முக்கிய மான நாணயப் பகுதிப் பிரச்சினைகளிலிருந்தே மகா வங்கியின் செயலாற்றம் 1959ம் ஆண்டு எழுந்தது. இவ்விரு பிரச்சினைகளும், ஒன்று வரவு செலவுத் திட்டம் சம்பந் தப்பட்டது, மற்றது சென்மதி நிலுவை சம்பந்தப்பட்டது, என்ற முறையில் வெவ்வே றுணவையாகும். ஆனால் வெளி நாட்டுச் சொத்தின் விரைவான வீழ்ச்சி, பிரதான மாக அரசாங்கம் தனது நிதி சம்பந்தமான இடர்ப்பாடுகளை நிவர்த்திப்பதற்காக கையாண்ட ஏற்பாட்டின் பயனுகவே நிகழ்ந்தது. இவ்விரு பிரச்சினைகளைத் தவிர, வர்த்தக வங்கி களின் கைம்மேற்பணம்பெறுநிலையை நிலை நிறுத்துவதற்காக மகா வங்கி கொடுகடன் வசதிகளை ஏற்படுத்த வேண்டிய தேவை எழுந்தது. ஆயினும் இவ்வசதி முந்திய ஆண் டிலும் பார்க்கக் குறைந்த அளவிலேயே செய்ய வேண்டியிருந்தது. இவ்வறிக்கையில் முன்னரே ஆராய்ந்தபடி, வரவு செலவுத் திட்டக் குறையை நிவர்த்தி செய்ய அரசாங் கம் அசாதாரண வழிவகைகளை உபயோகிக்க முன் வந்தமையினுலேயே, 1959ம் ஆண்டு அரசாங்கத்தின் நிதிசம்பந்தமான பிரச்சினைகள் பெரும்பாலும் தோன்றின. அரசாங் கம் எதிர்பார்த்த அளவிற்கு அந்நிய உதவி கிடையாமையால் எழுந்த நிதி சம்பந்த மான இடர்ப்பாடுகள், வருவாய்க்கும் செலவுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் குறைப்பதன் மூலம் அல்லது உள்நாட்டுக் கடன் வாங்குதலை அதிகரிப்பதன் மூலம் அல்லது இருவகை வழிகளின் மூலமும் தவிர்க்கப்பட்டிருக்கலாம். அவ்விருவகை வழி களும் இப்பொழுது ஆராயப்படும்.

அரசாங்கத்தின் நிதி ஆலோசகர் என்ற முறையில் மகா வங்கி அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பட்ட குறைமட்டம் குறைக்கப்படுவதற்கான பல பரிகார நட வடிக்கைகளைப்பற்றி ஆராயுமாறு திரும்பத் திரும்ப யோசனை கூறியது. ஆனால் பல தரப்பட்ட காரணங்களுக்காக அந்த யோசனைகளை அரசாங்கம் ஒன்றில் ஒத்திவைத்தது, அல்லது கொண்டு நடத்த முடியாமற் போயிற்று. அரசிறை விடயத்தில், 1959ம் ஆண்டு ஆடி மாதம் வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டனவற்றைத்தவிர, 1959ம் ஆண்டு ஏற்பட்ட ஒரேயொரு அதிகரிப்பு இறப்பர் ஏற்றுமதித் தீர்வையில் ஆகும். இது புரட்டாதி மாதத்திலும், கார்த்திகை மாதத்திலும் இரு தடவைகள் உயர்த்தப்பட்டது. இறப்பர் தீர்வை, நிதி வருட இறுதியில் உயர்த்தப்பட்டமையால் அது அவ்வாண்டு அர சாங்க நிதி நிலைமையில் ஒரு நயமான மாற்றங்களையும் கொண்டுவரவில்லை. அரசிறை நிதியால் ஈடுசெய்யப்படும் செலவில் ஏறக்குறைய 850 இலட்சம் ரூபாய் அதிகரிப்பு ஏற் பட்டது. ஆயினும் கடன் நிதிச் செலவில் உண்டான கணிசமான 1760 இலட்சம் ரூபாய் வீழ்ச்சி, வரவு செலவு திட்டக் குறைமட்டத்தை குறைப்பதற்கு உதவி செய்தது என் றாலும், பொருளாதார வளர்ச்சியைக் கண் கொண்டு நோக்கும் பொழுது இது ஓர் திருப்திகரமான அம்சமாகாது.

1958–59ல் ஏற்பட்ட உண்மை நிகரப் பணக்குறையான 4130 இலட்சம் ரூபாய் முந்திய நிதியாண்டிலும் பார்க்க ஏறக்குறைய இருமடங்காகும். 1959–60ம் ஆண்டின் முதற் காற் பகுதியில் அரசாங்கத்திற்குத் தேவையான பணம் 1958–59ம் ஆண்டின் முதற் காற்பகுதியில் இருந்ததிலும் பார்க்க கணிசமான முறையில் உயர்ந்தது ஆகும்.

ஆகவே 1959ம் ஆண்டு இருந்த நிதி நிலைமையின்படி, அரசாங்கம் 1958ம் ஆண்டு கடன்பட்ட தொகையிலும் பார்க்க மிக மேலதிகமாகக் கடன்பட வேண்டிய தேவை எழுந் தது. வங்கிகள் அல்லாத துறை, இத்தகைய பிரம்மாண்டமான அரசாங்க நிதித் தேவை யைச் சமாளிக்க முடியாமல் இருந்தாலும், இத்துறை 1958ம் ஆண்டிலும் பார்க்க கணிசமாகக் கூடிய அளவில் அரசாங்கக் கடன் பத்திரங்களை உட்கொள்ளக் கூடியதாக

இருந்தது. இக்குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் காரணங்கள் இவ்வறிக்கையின் முன்னைய பகுதிகளில் கூறப்பட்டன. சாதாரணமாக ஒவ்வொரு ஆண்டும் பணச்சந்தையிற் கடன் படவரும் தேசிய ஈட்டு வங்கியோ அல்லது தேசிய வீடமைப்பு நிதியோ 1959ம் ஆண்டு கடன்பட வரவில்லை என்பது மேற்படி காரணங்களில் ஒன்றாகும். 1959ம் ஆண்டு அரசாங்கப் பணத்தேவைகளின் பிரமாண்டமான அளவை உத்தேசித்து மகா வங்கி, இந் நிலையங்கள் நேரடியாக பணச் சந்தைக்குப் புகாது, தங்கள் பணத் தேவைகளை இறைசேரியிலிருந்தோ, அல்லது வேறு வழிகளினாலோ பெற வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்தது.

வர்த்தக வங்கிகளின் கைம்மேற்பணம்பெறுநிலை 1958ம் ஆண்டிலும் பார்க்க சிறிது சீரடைந்தது. எனவே அவை 1958ம் ஆண்டு குறைத்துக் கொண்ட தங்களது அரசாங்கக் கடன் பத்திரங்களின் உடைமைகளை 1959ம் ஆண்டு அதிகரித்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. ஆனால் பெரிய அரசாங்கக் கடன் பத்திர வெளியீட்டை உட்கொள்ளக் கூடிய அளவிற்கு இந்தக் கைம்மேற்பணம்பெறும் நிலை அமையவில்லை. இந்த நிலைமையில் வரவு செலவுத் திட்டக் குறைமட்டம் அடைக்கப்படுவதற்கு இன்னும் நிதி தேவைப்பட்டது. கடன் பெறத்தக்க வேறு ஆதாரங்கள் இன்மையால் மகா வங்கியிலிருந்து கடன் எடுத்து, அரசாங்கம் இக்குறையை நிவர்த்தி செய்தது. எவ்வருடத்திலும் அரசாங்கத்திற்கு மகா வங்கி கொடுக்கக் கூடிய முற்பண உதவி அவ்வருடத்திற்கென மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 10 சதவீதத்துக்கு மேற்படாமல் அமைய வேண்டும் என நாணய விதி அதிகாரச் சட்டத்தின் 88ம் பகுதியின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே 1959ம் ஆண்டு இவ்வழியால் 1330 பெறக் கூடிய இலட்சம் ரூபாய்களிலும் பார்க்க கூடிய நிதித் தேவை இருந்தமையால் அரசாங்கம் இறைச்சேரி உண்டியல்களை வெளியிடுவதன் மூலம், மகா வங்கியிடமிருந்து தேவைப்பட்ட பணத்தைப் பெற்றுக்கொண்டது. 1959ம் ஆண்டு அரசாங்கம் இவ்வுபாயத்தை கணிசமான அளவில் கையாண்டது. இவ்வாண்டு, இறைசேரி உண்டியல்களின் தொகை 2550 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது. அதே காலத்தில் மகா வங்கியினது அரசாங்க இறைசேரி உண்டியல் உடைமைகள், 1915 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன இறைசேரி உண்டியல்களின் சட்டபூர்வமான எல்லை, இவ்வாண்டு பாராளுமன்றத்தில் இரு தடவைகள் உயர்த்தப்பட்டது. 2000 இலட்சம் ரூபாய்களிலிருந்து 3500 இலட்சம் ரூபாய்களுக்கு சித்திரை மாதம் உயர்ந்தப்பட்டது. இவைகள் எல்லாம் பயன் படுத்தப்பட்டு முடிந்த பின்னர், ஐப்பசி மாதத்தில் அது மேலும் 4500 இலட்சம் உயர்த்தப்பட்டது. 1959ம் ஆண்டு இறுதியில் இறைசேரி உண்டியல்களின் நிலுவை மொத்தம் 4200 இலட்சம் ரூபாய்களாகும். 1960ம் ஆண்டு தை மாத முடிவில் இறைசேரி உண்டியல்களின் நிலுவை சட்டத்தில் வரையறுக்கப்பட்ட 4500 இலட்சம் ரூபாய்க்கு அதிகரித்தது.

இப்பெரிய குறை அடைக்கப்படும் பொழுது, பணவீக்கத்தை உண்டாக்கக் கூடிய நிதியீட்ட முறைகளை அரசாங்கம் கையாண்டதன் பயனாக நாட்டில் பொருட்கள், சேவைகள் முதலியவற்றின் கேள்வி, ஏறுமாறாகப் பெருகியது. பொருட்கள், சேவைகளின், பேரில் ஏற்பட்ட அரசாங்க நேரடிச் செலவு ஒருபுறம் அதிகரித்ததாலும், இதன் மறைமுக விளைவாக தனிப்பட்டோர் வருமானங்கள் மறுபுறம் அதிகரித்ததாலும், மேற்படி கேள்வியில் பெருக்கம் எழுந்தது. போதிய புள்ளிவிபரங்கள் இன்மையால், உள்நாட்டு பொருட்கள், சேவைகளின் நிரம்பல், இவ்வதிகரித்த கேள்விக்கு எவ்வளவு தூரம் ஈடு கொடுக்கும் வண்ணம் அமைந்தது என்பதை அளவிடுதல் கஷ்டமான காரியமாகும். ஆனால் அரசாங்கம் தோற்றுவித்த மேற்படி கேள்வியின் அதிகரிப்பு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்தொகுதியின் அதிகரிப்புக்கு வழி காட்டியது என்பது மிகவும் தெளிவானது. இதன் விளைவாக 1959ம் ஆண்டு இறக்குமதிகள் என்றும் இல்லாத மிகப் பெரிய அளவுக்கு உயர்ந்துள்ளன. எனவே ஏற்றுமதியினால் கிடைத்த வருமானங்கள் அதிகரித்த போதிலும் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்தில் ஓர் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டது இவ்வாண்டு இலங்கையினது வெளிநாட்டுச் சொத்துக்களின் முழுப் பெறுமானம் 1945 இலட்சம் ரூபாய்களால் குறைவுற்றது.

அரசாங்கத்தின் அரசிறைக் கொள்கையால், சென்மதி நிலுவையின் பேரிலும் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்களின் பேரிலும் ஏற்படும் பிரதிகூலமான பயன்களை மகா வங்கி அறிந்திருந்த போதிலும், நியதிச் சட்ட முறைப்படி, பொதுப்படு கடன் நிர்வாகத்திற்கு பொறுப்பாளியான அரசாங்க முகவர் என்ற கடமைக் கேற்ப, மகா வங்கி அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்தில் உள்ள செலவுகளைத் தீர்ப்பதற்கு, இறைசேரியுடன் ஒத்துழைக்கும் ஸ்தானத்தைக் கைவிட முடியவில்லை. புதுமையாக இருந்த போதிலும், புதிதாகக்கொண்டு வரப்பட்ட வரி நடவடிக்கைகளின் முழுப்பயனைப் பெறுவதற்கு சில காலம் செல்லுமென்பதையும் மகா வங்கி உணரவேண்டியிருந்தது. ஆயினும் நாணயச்சபை, சட்ட அனுமதியுடைய தன் கடமைகளை மனதிற்கொண்டு அவ்வவ் வேளைகளில் தோன்றுகின்ற நிலைமையில் இயல்பாக அடங்கியிருக்கும் அபாயங்களைப்பற்றி அரசாங்கத்திற்கு எடுத்துரைத்தது.

பணக்குறைவு நிவர்த்திப்புக்கு அரசாங்கம் கையாண்ட, பணவீக்கத்தை உண்டாக்கும் நிதியீட்டத்துடன் ஒப்பிடுகையில், வர்த்தக வங்கிகள், தனிப்பட்டோர் துறைக்குக் கொடுத்த கடன் அதிகரிப்பு, சிறிதாகவே இருந்தது. எனவே சென்மதி நிலுவையில் ஏற்பட்ட நெருக்கடி பிரதானமாக அரசிறை காரணமாகவே தோன்றியபடியால் பெரிய அளவில் இல்லாத தனிப்பட்டோர் துறைக்கு வர்த்தக வங்கிகள் கொடுத்த கடனின் நிரப்பலைத் தடுப்பது முறையாகாது என மகா வங்கி எண்ணியது. தனிப்பட்டோர் துறைக்குக் கடன் கொடுப்பதைத் தடை செய்தால், உள்நாட்டுப் பொருளாதாரத்தில் பிரதிகூலமான பயன்கள் ஏற்பட்டு உற்பத்திச் செலவையும் வாழ்க்கைச் செலவையும் உயர்த்தும் என்ற உண்மையையும் மகா வங்கி மனதில் கொண்டது. இந்தச் சந்தர்ப்பத்தில், இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்களின் நிலைமை மிகவும் அபாயகரமான நிலைக்கு வந்தாலன்றி, தனிப்பட்டோர் துறைக்குக் கடன் கொடுப்பதைத் தடைசெய்வதற்கு மகா வங்கி விரும்பவில்லை.

**1959**ம் ஆண்டு ஆடி மாதம் பாராளமன்றத்திற்குக் சமர்ப்பிக்கப்பட்ட **1959–60**க்குரிய வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில், பணக்குறை நிவர்திப்புக்கு நிதியீட்டும்மட்டம் குறைக்கப்படும் அறிகுறிகள் காணப்பட்டன. **1958–59**ம் நிதியாண்டு முடிவுக்கு முன்னரேயே அடுத்த நிதியான்டில் பல முனைகளில் (ஏற்கனவே சில மூலதன மாற்றங்களுக்கும், நடைமுறை மாற்றங்களுக்கும் எல்லை வரையறுக்கப்பட்டது போன்ற நடவடிக்கைகளுக்கும் மேலாக) நடவடிக்கை எடுக்க வேண்டியது பற்றி ஆலோசித்தல் அவசியம் என அரசாங்கமும், மகா வங்கியும் அபிப்பிராயங் கொண்டிருந்தன. ஆயினும் **1959**ம் ஆண்டு புரட்டாதி மாத முடிவுக்கும் கார்த்திகை மாத முடிவுக்கும் இடையே நிலவிய குழப்பமான அரசியல் நிலைமை காரணமாக அத்தகைய நேரடி நடவடிக்கை எடுக்க முடியாமற் போயிற்று. இதற்கிடையில், **1959**ம் ஆண்டு, ஐப்பசி மாதம் **250** இலட்சம் ரூபாய்க் கடன் திரட்டப்பட்ட போதிலும், இறைசேரி தன் செலவுகளைத் தீர்ப்பதற்காக மூன்று மாத இறைசேரி உண்டியல்கள் மூலமாக வரும் பணத்தை நாட வேண்டியிருந்தது. இரண்டு வாரங்களுக்குள் அடைக்கப்படவேண்டியிருந்த நிலுவை உண்டியல்கள் அடைக்கப்படாதிருந்தும், இம்மேலதிகமான இறைசேரி உண்டியல்களின் வெளியீடுகளை உட்கொள்ளத்தக்க அளவில் கேள்விப்பத்திரங்கள் வராதிருந்தும், மேற் கூறிய நிலைமை ஏற்பட்டது. **1959**ம் ஆண்டு மார்கழி மாதம் **15**ம் திகதி இறைசேரி உண்டியல்களின் வட்டி வீதம் **2.03** சதவீதத்திற்குக் உயர்ந்தது. இந்த நிதி நிலைமையை முன்னிட்டு மார்கழி மாதம் **16**ம் திகதி நாணயச்சபை வங்கி வட்டி வீதத்தை **2½** சதவீதத்தில் இருந்து **3** சதவீதத்துக்கு உயர்த்தியது. கடன் திரட்டுவது பற்றிய யோசனைகளையும், தெரிந்து எடுக்கப்பட்ட சில நாணய நடவடிக்கைகளையும், மகா வங்கி மனத்திற் கொண்டிருந்தது. ஆயினும், ஆரம்பத்தில் வங்கி வட்டி வீதத்தை உயர்த்துவதற்குச் சம்மதித்த நிதியமைச்சர் **1959**ம் ஆண்டு மார்கழி மாதம் **23**ம் திகதி நாணய விதி அதிகாரச்சட்ட **115 (2)**ம் பகுதிக்கிணங்க வங்கி வட்டி வீதத்தை முந்திய மட்டத்திற்கு குறைக்குமாறு ஓர் பணிப்பறிக்கையை நாணயச்சபைக்கு வெளியிட்டார். நாணயவிதி அதிகாரச் சட்டம் **115(2)**ம் பகுதி பின்வருமாறு:–

" நாணயச்சபையின் நாணயக் கொள்கை இலங்கை மக்களின் மிகப்பெரிய நன்மைக்கு வழிகாட்டியுள்ளதோ என்பதைப்பற்றி நிதியமைச்சருக்கும், நாணயச்சபைக்கும் இடையே அபிப்பிராயபேதம் எப்போழுதாகிலும் ஏற்படுமாயின், நிதியமைச்சரும், சபையும் ஒரு ஒப்பந்ததிற்கு வரமுயற்சித்தல் வேண்டும். அத்தகைய ஒரு ஒப்பந்தத்தை அடைய முடியாவிடின், அரசாங்கத்தின் அபிப்பிராயத்திற்கு இணங்குமாறு ஓர் கொள்கையை, சபை ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் பொறுப்பாளியாகும், என நிதியமைச்சர் சபைக்கு அறிவித்து, அச்சபை அத்தகைய கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் எனப்பணிக்கலாம். அத்தகைய ஓர் வழியை நிதியமைச்சர் காட்டினுல் சபை அவ்வழியைப் பின் பற்றிச் செயலாற்ற வேண்டும்."

ஆகவே நாணயச்சபை 1959ம் ஆண்டு மார்க்கழி மாதம் 24ம் திகதி தொடக்கம் வங்கி வட்டி வீதத்தை $2\frac{1}{2}$ சதவீதத்திற்கு குறைத்தது. வங்கி வட்டி வீதத்தை திருப்பியமைத்ததுடனும் நிதிக் கொள்கையில் அரசாங்கத்தின் மனப்பாங்கை நோக்கியும், மகா வங்கி தான் உத்தேசித்த நாணயக்கட்டுப்பாட்டுத் திட்டங்களைக் கைவிட வேண்டியதாயிற்று.

பொதுப்படு கடன் கொள்கையில் மகா வங்கி தொடர்ந்து, சாத்தியமானவரையில் கடன் கொடுக்கும் தனிப்பட்டோரிடம் இருந்தே கடன் பெற முயன்றது. 1959ம் ஆண்டு தனிப்பட்ட மூலங்களில் இருந்து உள்வரும் பணத்தொகை அதிகரித்தது, எனினும் அதற்கு ஆதாரமான சேமிப்புக்களை மேலும் தூண்டுதல் அத்தியாவசியம் எனத் தேரப்பட்டது. 1959ம் ஆண்டு புரட்டாதி மாதம் தேசிய சேமிப்பு ஆணையாளருடன் மகா வங்கி ஒரு பேச்சுவார்த்தை நிகழ்த்தி, சேமிப்பு நிதி திரட்டப்படுவதற்கு அரசாங்கத்தின் பலமான கருவியாக தேசிய சேமிப்பு இயக்கம் விளங்குவதற்கு அது சிலவகையில் சீர்திருத்தி அமைக்கப்படுவதற்கு ஆலோசனை கூறியது.

அரசாங்க நிதிக் கேள்வி அதிகரிப்பை முன்னிட்டு, வட்டி விளைவு அதிகரிப்பதன் பயனுக அரசாங்கத்துக்கு எவ்வளவு தூரம் நிதிகள் நிரம்பும் என்பதை (அதாவது வட்டிவிளைவுக்கு நிதி நிரம்பல் இசையும் தன்மையை) சில காலங்களாக மகா வங்கி ஆராய்ந்து வந்தது. குறுகிய காலக்கடன்படுதல் சம்பந்தப்பட்ட வகையில் பணச்சந்தையில் பெரும்பாலும் நெருக்கடி நிலவியமையால் இறைசேரி உண்டியல்களின் வட்டி வீதம், தை மாதத்தில் இருந்த 1.71 சதவீதத்தில் இருந்து, ஆனிமாதம், 2.00 சதவீதத்திற்குப் படிப்படியாக உயர்ந்தது. ஆனி மாதத்திற்குப் பின்னர் இரண்டுவார இறைசேரி உண்டியல்களின் சந்தைக்கேள்வி அதன் அதிகரித்த வாத்துக்கு ஈடுகொடுக்க முடியாமையால் அவற்றில் பெரும்பாண்மையான பங்கை மகா வங்கியே எடுக்க வேண்டியதாயிற்று ஆனி மாதத்திற்குப் பின்னர், மகா வங்கியே இறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யும் பிரதான நிலையமாக விளங்கிய காலத்தில் இறைசேரி உண்டியல்களின் வட்டி வீதம் 2.00 சதவீதமாக இருந்தது. ஆயினும் மார்கழி மாதத்தில் இறைசேரி உண்டியல்களுக்கு சந்தை ஆதரவு பலமடைந்தது. வட்டி வீதமும் மார்கழி மாதம் 13ந் திகதி 2.03 சதவீதத்திற்கும், ஆண்டு முடிவில் 2.08 சதவீதத்திற்கும் உயர்ந்தது.*

உயர்ந்த வட்டி விகிதம் பொதுவாகக் கணிசமான முறையில் கூடிய நிதியைக் குறுகிய காலச்சந்தையில் இருந்து கொண்டு வராது என மகா வங்கி உணர்ந்தாலும், இது நீண்ட காலச் சந்தையில் இசைந்து கொண்டு வரக்கூடிய சாத்தியமான தொகையை ஆராய்வதற்கு விரும்பியது.

இந்த நோக்கத்துடன், 1959ம் ஆண்டு ஓர் மிக முக்கியமான மாற்றத்தை மகா வங்கி ஏற்படுத்தியது. இவ்வளவு காலமும் $3\frac{1}{4}$ சதவீதமாக இருந்த 16–20 ஆண்டுக் காலக் கடன் வட்டி விகிதம் 1959ம் ஆண்டு கார்த்திகை மாதம் $3\frac{1}{2}$ சதவீதத்திற்கு

---

*** 1960ம் ஆண்டு பங்குனி மாதம் 15ம் திகதி இறைசேரி உண்டியல்களின் வட்டி வீதம் மேலும் 2·43 சதவீதத்திற்கு உயர்ந்தது.***

உயர்த்தப்பட்டது. இதன்படி அம்மாதத்தில் இலங்கை அரசாங்க 1975–79 கால $3\frac{1}{2}$ சதவீதக்கடன் வெளியிடப்பட்டது. நீண்டகாலத் தேவைகளுக்காக, மிக உயர்ந்த மட்டச் சேமிப்புக்களும் முதலீடுகளும், நடைமுறையில் உள்ள வட்டிவீத அமைப்பின்படியோ அல்லது வேறுன வட்டி வீத அமைப்பின்படியோ ஏற்பட சாத்தியமாகுமா என்பது இனி மேல் தேரத்தகுந்த விடயமாகும்.

**வர்த்தக வங்கிகளுக்குக் கொடுக்கப்படும் மகா வங்கியின் முற்பணங்கள்:** முன்னேரே குறிப்பிட்டபடி வர்த்தக வங்கிகளின் கைமேற் பணம்பெறும் நிலையை நிலைநிறுத்துவதற்காக, மகா வங்கியும் செயலாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பணச் சந்தையில் ஏற்பட்ட நெருக்கடி பயனுக மகா வங்கியிடம் இருந்து வர்த்தக வங்கிகள்–முந்திய ஆண்டிலும் பார்க்க குறைவான அளவில் என்றுலும் – அடிக்கடி கடன்பட வேண்டி நேர்ந்தது. இவ்வாண்டில் வர்த்தக வங்கிகள் கொடுத்த கடனில் ஏற்பட்ட அதிகரிப்பு சிறிய அளவில் இருந்தமையாலும், இத்தகைய கொடு கடனில் பெரும்பகுதி பிரதான பொருட்களின் ஏற்றுமதி, இறக்குமதிக்காக வழங்கப்பெற்றமையாலும், நிலவும் வங்கி வட்டி வீதத்தில், அரசாங்கப் பிணைகளுக்கு எதிராக வர்த்தக வங்கிகள் கடன் பெறுவதைப் மகா வங்கி அனுமதித்தது.

**அந்நிய கடன் உடன்படிக்கைகள்:** 1959ம் ஆண்டு இலங்கை அரசாங்கம் முடி வாக்கிய பின்வரும் அந்நிய கடன் உடன்படிக்கைகள் சம்பந்தமாக மகா வங்கியின் ஆலோசனை நாடப்பட்டது:–

(1) 1959ம் ஆண்டு, பங்குனி மாதம் 25ம் திகதி 22 இலட்சடொலர் கடனுக்காக 480ம் அமெரிக்க பொது ஜனச்சட்டத்தில் கீழ் அமெரிக்க ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடன் செய்த உடன்படிக்கை. இலங்கை நாணயத்தில் கொடுப்பனவு செய்தால் 5 சதவீதமும், அமெரிக்க நாணயத்தில் கொடுப்பனவு செய்தால் 4 சதவீதமும், இக் கடனுக்கு உள்ள வருடாந்த வட்டியாகும். 1963ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1ம் திகதி தொடங்கி 26 ஆண்டுக்காலத்திற்குள் இக்கடன்முதல் அரையாண்டுத் தவணைப் பணங்களில் திருப்பிக் கொடுபடல் வேண்டும். முதற் தவணைப் பணமாக 1055 டொலரும், கடைசித்தவணைப்பணமாக 97,982 டொலரும் கொடுத்து இக்கடன் தீர்க்கப்படல் வேண்டும்.

(2) 1959ம் ஆண்டு, புரட்டாதி மாதம் வேறெரு 58.6 இலட்சம் டொலர் கடனுக்காக 480ம் அமெரிக்க பொதுஜனச் சட்டத்தின் கீழ், அமெரிக்க ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடன் ஓர் உடன்படிக்கை முடிவாக்கப்பட்டது. இக்கடனுக்கு வருடாந்த வட்டி $3\frac{1}{2}$ சதவீதமாக உள்ளது. இக்கடனின் முதலாவது பகுதி தரப்பட்ட மாத முடிவுக்கு, நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் கடன் முதலை திருப்பிக் கொடுக்க ஆரம்பித்தல் வேண்டும். முப்பது ஆண்டுக் காலத்தில், அரையாண்டு தவணைப் பணங்களாகக் கொடுத்து இக்கடன் தீர்க்கப்படல் வேண்டும். முதன் முதல் 2957 டொலரும், கடைசியாக 254,804 டொலரும் கொடுத்து இக்கடன் மீளப்படல் வேண்டும்.

(3) 55 இலட்சம் பிரித்தானிய பவுன் பெறுமானமுள்ள கடனுக்காக யூகோஸ்லேவியாவுடன் செய்த உடன்படிக்கை: இக்கடன் இலங்கைக்கு யூகோஸ்லேவியா கொடுக்கும் மூலதனப் பொருட்களின் 90 சதவீதம் பெறுமானமாக இருக்கும். மீதி 10 சதவீதம், இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்திற்கும், பொருட்கள் கப்பலேற்றப்பட்டு முடிந்த காலத்திற்கும் இடையில் இறக்குமதியாளர்களால் ரொக்கப் பணத்தில் கொடுக்கப்படல் வேண்டும், கடனுக உள்ளதொகை, எட்டு ஆண்டுக்கு மேற்படாத ஒரு காலத்திற்குள் அரையாண்டு தவணைப் பணங்களாகக் கொடுத்துத் தீர்க்கப்படல் வேண்டும். தனித்தனி ஒப்பந்தங்களின் கீழ் பொருட்கள் கப்பலேற்றப்பட்டு முடிந்த திகதிக்குப் பின்னர், ஆறு மாதத்தில் முதலாவது தவணைப் பணம் கொடுக்கப்பட வேண்டும். பயன்படுத்தப்பட்ட கடன்களின் தொகைக்கு சுமைச் சீட்டில் குறித்த திகதி முதல் $3\frac{1}{2}$ சதவீத வருடாந்த வட்டி கொடுக்கப்படும். 1959ம் ஆண்டில் இக்கடன்வசதி இதுவரை பயன் படுத்தப்படவில்லை.

(4) பொது நலவரசு உதவி திட்டத்தின் கீழ் பிரித்தானிய அரசாங்கத்திடமிருந்து 25 இலட்சம் பவுன் (ஏறக்குறைய 330 இலட்சம் ரூபாய்கள்) கடன் பெறுவதற்காக நடாத் தப்பட்ட பேச்சு வார்த்தைகள் முடிவாக்கப்பட்டன. இலங்கைத் தொலைபேசி முறை யை புனருத்தாரணம் செய்யத் தேவையான சாதனங்களை வாங்குவதற்காக இக்கடன் உடன்படிக்கை முடிவாக்கப்பட்டது. பிரித்தானிய அரசாங்கம் எந்த வட்டி வீதத்தில் கடன் பெற முடியுமோ அதே வட்டி வீதம், இக்கடனுக்கும் விதிக்கப்பட்டது. அத் துடன் காற்சதவீத முகாமை வரியையும் இக்கடன் கொண்டுள்ளது. மேற்படி சாத னங்கள் ஒப்படைக்கப்பட்ட ஐந்து ஆண்டுக் காலத்திற்குள், தவணைப் பணங்களாகக் கொடுத்து இக்கடன் தீர்க்கப்படல் வேண்டும்.

**சர்வதேசப்பண மாற்றங்கள்:** 1959ம் ஆண்டு சர்வதேசப் பண நிதியில் இலங்கையின் அனுமதிப்பங்கு, 300 இலட்சம் டொலர்களால் அதிகரிக்கப்பட்டது. இதில் 25 சதவீதம் தங்கத்தில் கொடுக்கப்பட்டது. இவ்வதிகரிப்பு 1959ம் ஆண்டு புரட்டாதி மாதம் நடை முறைக்கு வந்தது. இப்பொழுது இலங்கையின் அனுமதிப்பங்கு 450 இலட்சம் டொ லர்களாகும். இலங்கை சம்பந்தப்பட்டவகையில் இவ்வதிகரித்த அனுமதிப்பங்கின் முக் கியத்துவம், எங்கள் சென்மதி நிலுவையின் ஏற்றத் தாழ்வுகளின் பயனுக ஏற்படக் கூடிய கொடுப்பனவு இடர்ப்பாடுகளை நிவர்த்திப்பதற்கு இது ஓர் கூடுதலான ஒதுக்குநிதி யை ஏற்படுத்துகின்றதென்பதேயாகும்.

சர்வதேச அரங்கில், அனுமதிப்பங்குகளின் மேல்வாரியான அதிகரிப்பு, கூடிய செயலாற்ற இணக்கத்தைக் கொண்டு வரும். அத்துடன் சாதாரணப்பற்றுக்களை விரித்து அங்கத்தினர்களுக்கு ஆதரவைத் திடமாக அளிப்பதோடு, இந்நிதிக்கு மேலதிகமான தங்க ஒதுக்கல்களையும் உண்டாக்கும். இதனுல் விளையும் சர்வதேச கைம்மேற்பணம் பெறும் தன்மையின் அதிகரிப்பு, அங்கத்துவ நாடுகளின் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஓர் வரவேற்கத்தக்க விடயமாகி, சர்வதேசப் பொருளாதார இயக்கத்தை தொடர்ந்து பேணும்.

சர்வதேசப் பணநிதியில் இலங்கையின் அனுமதிப்பங்கு அதிகரிக்கப்பட்டதற்கிசைய 'சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கிக்கு' இலங்கையின் ஒப்பப்பணம் 600 இலட்சம் டொலர்களுக்கு உயர்ந்தப்பட்டது.

## IV. மகா வங்கியின் கணக்குகளும் இயக்கங்களும்.

மகா வங்கியின் 1959ம் ஆண்டுக்குரிய நிதிக்கணக்குகள் பின்னிணைப்புப் பகுதியி லுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. 958ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பிரதான மாற்றங்கள் பின்வருமாறு:-

| | மாற்றம் | |
|---|---|---|
| | இலட்சம் ரூபாய்களில் | சதவீதம் |
| மொத்தக் கேள்விப் பொறுப்புக்கள் .. .. .. | + 732 | + 10·0 |
| நாணயச் சுற்றோட்டம் .. .. .. .. | + 430 | + 7·4 |
| கேள்வி வைப்புகள் .. .. .. .. | + 303 | + 20·0 |
| இதில் வர்த்தக வங்கிகள் .. .. .. | + 39 | + 4·3 |
| சர்வதேச ஒதுக்கு நிதி .. .. .. .. | —1520 | — 28·2 |
| உள்நாட்டுச் சொத்து .. .. .. .. | +2528 | + 96·9 |
| அரசாங்க, அரசாங்க உத்தரவாதமுள்ள பிணைப் பத்திரங்கள் .. | +1910 | +124·5 |

\+ அதிகரிப்பு

—குறைவு